**Tamil Heritage Foundation**

தமிழ் மரபு அறக்கட்டளை

Electronic preservation of Tamil heritage materials

e-Book series

an international NGO initiative to digitize old Tamil books and palm leaf manuscripts

visit http://www.tamilheritage.org

தமிழ் ஓலைச்சுவடிகள், நூல் பாதுகாப்பு.

பாதுகாப்பற்ற நிலையில், மறுபதிப்பு காணாத பழைய நூல்கள், ஓலைச்சுவடிகள் போன்ற தமிழ் முதுசொம்களை மின்பதிப்பாக்கி தமிழ் வளத்தை நிரந்தரமாக்கும் ஒரு சர்வதேச தன்னார்வ முயற்சி.

மேலும் அறிய: http://www.tamilheritage.org

முதுசொம் முத்திரை

தமிழ்ப்பாதுகாப்பின் அக்கறை

உ

வேலுமயிலுந் துணை.

# நாடார் குல மித்திரன்.

அருப்புக்கோட்டை நாடார் கல்விப்பிரசங்க சபையினின்று வெளிவரும்

## ஒரு மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

வயது 1. | 1920ஞு மேமீ ரௌத்திரிஞு சித்திரைமீ | மாதம் 9.

### கடவுள் வணக்கம்.

என்பெலா நெக்குடைய ரோமஞ்சி லிர்ப்பவுட
    லிளகமன தழலின் மெழுகா
யிடையறா துருகவரு மழைபோலி ரங்கியே
    இருவிழி கணீ ரிறைப்ப
அன்பினால் மூர்ச்சிக்க வன்பருக் கங்ஙனே
    அமுதசஞ் சீவி போல்வந்
தானந்த மழைபொழிவை யுள்ளன்றி லாதவெனை
    யார்க்காக வடிமை கொண்டாய்
புன்புலால் மயிர்தோல் நரம்பென்பு மொய்த்திடும்
    புலைக்குடி லொருவ ருப்பு
பொய்யல்ல மெய்யிதனை மெய்யென்று நம்பியென்
    புந்தி செலுமே பாழிலே
துன்பமா யலையவோ வுலகநடை யையவொரு
    சொப்பனத் திலும்வேண் டிலேன்
சத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
    சோதியே சுக வாரியே

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

# நாடார்குலமித்திரன்.

ரௌத்திரிஸு சித்திரைமீ

## கும்மாப்பட்டியில் இந்துக்களின் கொடுமை.

இராமநாதபுரம் ஜில்லா விருதுபட்டிக்கு 18-மைலுக்கு மேற்
கும்மாப்பட்டி என்னுஞ் சிறுகிராமமுளது. அங்கே பற்பல இந்துக்
வசிக்கின்றார்கள். பஞ்சமர்கள் வீடும் பலவுள. அங்கு உயர் வகுப்
ரெனச் சொல்லிக்கொள்ளு மிந்துக்கள், தெருவழியாய்ப் பஞ்சமர்
நடப்பதற்கு வழி விடுவதில்லை யென்ற காரணத்தைக்கொண்டு, முக
மதிய மதத்தில் சேர்க்காலாவது, மேன்மை யடையலாமென்றுமெ
சனை செய்து, சில தினங்களுக்குமுன் பஞ்சமஜனங்கள் 200-பே
களில் 84-ஆண்மக்கள், தலைரோமத்தைக் சழித்து சுன்னத்துப் பண்
ணிக்கொண்டிருக்கின்றார்களாம்.

ஆ! என்ன பரிதாபம்!! பிரபலம் பொருந்திய பிரிட்டிஷ் ஆட்
யின்கண், நாகரீகம், நாகரீகம் என்று கோஷிக்கும் இவ்விருபதாம்
நூற்றாண்டில், கேவலம் நாய், நரி, கழுதை, பன்றி முதலான கடை
பட்ட சென்துக்களுந் தடையின்றிச் செல்லக்கூடிய பொதுஜனப்பாதை
யில் நமக்கு இன்றியமையா புள்ளவர்களான பஞ்சமர்களை, நடக்கவிட
மாட்டோமென்றால், இதைப் பார்க்கிலும் அநியாயம் வேறுளதோ

பஞ்சமன் என்பான் யாவன்? ஆதியில் ஜனங்களை பிரம்ம, க்ஷத்
திரிய, வைசிய, சூத்திர என நான்கு வகுப்பாகப் பிரித்திருக்கின்றா
கள். அப்பால் மனிதத் தன்மைக்கிமாறான கொலை, களவு, கள், காமம்
பொய் எனப்பட்ட ஐந்து கொடுஞ் செயலாகிய பஞ்சமா பாதகத்தை
எவன் செய்தானோ, அவனை ஐந்தாவது வகுப்பு (பஞ்சமன்) ஆ
ஒதுக்கி வைத்திருக்கின்றார்கள். (இவர்கள் பறையடிக்குந் தொழிலை
பிரதானமாய்க் கொண்டதால் பறையர்களென்றொரு காரணப் பெய
முண்டு.) காலத்திற்குத் தக்கவாறு ஜீவியத்தைக் கழிக்க அவர்கள் ப
பல தொழில்களைச்செய்யும்படியாகவும் நேர்ந்தது. தொழிலினால் இழ
வாக நினைத்து அவர்களை கொடுமைக்குட்படுத்த ஒரு ஞாயமுமில்லை



தொழில்தான் இழிவேயன்றி தொழில் செய்கின்றவர்கள் சமத்துவ
மானவர்கள்தான். தொழிலினால் இழிவெனக் கொள்ளப்பட்டால், மற்
றவர்கள் தொழிலையும் கணக்கிட்டு ஜாதியை நிர்மானித்துவிட வேண்
டுமன்றோ? பஞ்சமா பாதகத்தை ஆதாரமாய்க் கொண்டால், இப்
போது உலகத்தில் எல்லோரும் பஞ்சமர்கள்தான். பஞ்சமா பாதகத்
திலும், பாதகத்தைச் சகலருஞ் செய்துகொண்டு, ஏழைகளான பஞ்ச
மர்கள் பேரில் பழிசுமத்தி, நெடுங்காலமுங் கொடுந்துன்பமு செய்து
வந்தால் தெய்வத்திற்குத்தான் பொறுக்குமா? இஸ்லாமான பஞ்சமர்
களை இனிமேலும் தெருவழிவராமல் தடுக்க முன் வருவார்களா?
வாருங்கள் ராவுத்தரே என்று மரியாதையாக அழைக்காவிடில், மரியா
தை கெட்டுப் போகுமன்றோ?

இந்துக்களின் சுகாதாரத்திற்கேற்ற பற்பல தொழில்களைச் செய்
து மிக்க அநுகூலந் தரக்கூடிய ஒரு பஞ்சமனை இந்துக்களுடைய வீதி
களில் நடக்க விடுவதில்லை. அவன் தலை மொட்டை யடித்து சுன்னத்
துச் செய்துகொண்டால், வாருங்கள் ராவுத்தரவர்களே, சாஹப்
பவர்களே என்று 32-சலாம் போட்டழைத்துக் கொண்டுபோய் நடு
வீட்டில் குந்த் வைப்பதும், இந்து மதாசார ஒழுக்கில் அநுவளவே
னுந் தவராது, தெய்வபக்தி யுடையவனாக மற்றொரு சாம்பானிருப்பி
னும், அவனை இந்துக்கள் கிரகத்தருகிற்கூட வரவிடுவதில்லை. அவனே
கிறிஸ்து மார்க்கத்திற் சென்று ஞான ஸ்நானம் பெற்று ஆத்ம ஞான
மில்லா அன்னிய பாஷையைக்கற்று, ஒரு சிறு உத்தியோகம் பெற்று
வந்து விட்டால், அவனை கோயில் கும்பாபிஷேகத்துக்கூட மேள
தாளத்துடன் அழைத்து வந்து ஊழியனென்று இருகை கட்டிநின்று
மாலைபோட்டு மரியாதை செய்வதும், நம் மூபர்குல இந்துக்கள் வழக்
கமாயிருக்கிறது. அஹா! வருணாச்சிரம தருமம் மென்பதும் இது
தானா? இதனால் முட்டாள்தனமே குடிகொண்டிருக்கிறதென்பது வெ
ளியாகின்றதா? வருணாச்சிரம தருமம் அநுவளவும் பிசகாமல் நடக்
கிறார்கள் என்பது வெளியாகின்றதா? எம்மதமும் சம்மதமென்றேற்க்
கப்படும், இந்துமதத்தில் வருணாச்சிரம தருமமெனப் பேர்வைத்துக்
கொண்டு செய்யும் கொடுமை சொழுந்து விட்டெறிவதினாலன்றோ?
இந்து மதத்தில் மிக்கப்பற்றுள்ள இந்துக்களெல்லாம் மகம்மதியர்களா
கவும், கிறிஸ்தவர்களாகவும் மாறுகின்றனர். இக்கொடுமை அடியோ
டொழியாவிடில், இந்துமதத்திற்கே ஹானிநேர்வதோடு வுயர்குலத்
தவரெனப் பெருமை பாராட்டிக்கொள்ளும் இந்துக்கள் நிலைமையும்
பரிதபிக்கக்கூடியதாய் நேரும்.

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

ஐந்து வருஷமாக நடந்த ஐரோப்பா யுத்தத்தின் சப்தத்தால் இந்தியாவில் புதைந்துகிடந்த பாரமார்த்திகஞானம் வெளிகிளம்பி விட்டது. கிருஷ்ணனும், புத்தனும், கிறிஸ்துவும், மகம்மதும் ஒன்றுபட்ட கொள்கை யுடையவர்கள். என்ற ஓசையானது உலகமெல்லாம் கடலொலிபோல் ஒலிக்கின்றன. அவ்வொலியின் வரவை ஒவ்வொரு இந்தியனும் வெகு அமைதியோடு கேட்டுக்கொண்டிருக்கின்றான். அவ்வொலிவரும் வேகத்தில் உண்மை யின்னதெனவறிந்து கொண்டால் மகம்மதியனு யிருந்தாலென்ன? இந்தியனு யிருந்தாலென்ன? கிறிஸ்தவனு யிருந்தாலென்ன? எல்லாம் ஒன்றென்றே விளங்கக்கூடும்.

இச்சென்னை மாகாணத்தில் சுமார் 80-லக்ஷம் பஞ்சமர்களும் மற்றுந் தீண்டப்படாதவர்களென்று சொல்லுஞ் சில ஜாதியார்களில் சுமார் 20-லக்ஷம் பேர்களும், முன் ராஜாங்கமாறுதலால் பகைமுற்றி மற்றவர்களால் கொடுமை செய்யப்பட்டுவரும் கௌரவமுள்ள இரண்டு ஜாதியார்களில் சுமார் 17-லக்ஷம் பேர்களும், ஆக நூற்றுப்பதினேழு லக்ஷம் ஜனங்களும், தங்களுக்கு மற்றவர்களால் உண்டாகக்கூடிய அவமானத்தை நினைத்து நம்மிந்துதேசத்தில் தற்காலம் இந்துக்களுக்கும், மகம்மதியர்களுக்கும் இருக்கின்ற வேற்றுமை யொழிந்து சகோதரத்வம் பாராட்டி வருந்தன்மையை மனதிற்கொண்டு ஒருக்கால் எல்லோரும் மகம்மதியர்களானாலும் அல்லது நிலவுலாவிய வுலகமெங்கும் பாவி மிக்க செல்வாக்குடன் விளங்கி பற்பல முடிமன்னர்களையும் தன்னகத்தே கொண்டிருக்கும் சக்திபுடைத்த தானது கிறிஸ்துமார்க்கந் தானே யென்று ஒருக்கால் எல்லோரும் கிறிஸ்தவர்களானால் ஒவ்வொரு மாகாணத்திலும் கஷ்டப்படுகிறவர்கள், அவ்வழியே செல்வார்களானாலும், இந்துமதத்தின் வைதீக மார்க்கத்திற்கு வேற்புழு விழுந்து நாசமுறுவதல்லாமல், லௌகிக சம்பந்தமான ராஜீயத் துறைகளிலும், உயர்குல இந்துக்களெனச் சொல்லிக்கொள்ளப் படுபவர்களுடைய பாடு திண்டாட்டத்திற்கு வந்துவிடும்.

ஏனென்றால் நம்முடைய ராஜாங்க முறையோ மெஜாரிட்டியார் பக்கம் நின்றுக்கொண்டிருக்கின்றது. வருங்காலத்தில் இந்திய அரசியல் சீர்திருத்தத்தின் பலாபலனும் மெஜாரிட்டியாருடைய கொள்கையை மேற்கொண்டதாய்த்தானிருக்கும் அறிகுறிகள் காணப்படுகின்றன. இக்கிலைமையில் 33-கோடி இந்துதேச ஜனங்களில் 21-கோடி



...ங்கள் மக மதியர்களாகவாவது, கிறிஸ்தவர்களாகவாவது ஆனால் ...திகத்திலும், லௌகிகத்திலும், உயர்குல யிந்துக்கள் மைனாரிட்டி...வர்களென்பதற்கு என்ன சந்தேகம்? எவன் எவனைக் கஷ்டப்படு...கின்றானோ அவனே அவனால் கஷ்டப்படுவானென்ற வேதாங்க...த்தேற்பவும், வாக்குறுதிமாறாத பெல்ஜியச் சனங்களைத் தாக்கிய ...ர்மனியானது போக்கழிந்துபோன அனுபவப் பிரமாணத்தையும் ...ந்து, அப்போது தெய்வச் சங்கற்பப்படி பழிக்குப் பழிவாங்க...ப்பார்களே யானால், மைனாரிட்டியாயுள்ள வுயர்குல யிந்துக்கள் ...சமர்க ளிப்போதிருக்கின்ற நிலைமைக்கு வந்துவிடவுங் கூடுமல்லவா?

ஆத்மஞானத்தைப் பிரதானமாய்க் கொண்ட நம்மிந்து தேசத்... அப்பேர்ப்பட்ட மாறுதலுக் கிடங்கொடாமல் தடுக்கவேண்டிய ...றுசெய்து, அடிக்கடி நேரும் பெருங் கொடுமைகளை அடியோ...ழிக்க வழிதேட வேண்டும். ராஜாங்கத்திலே தற்காலம் அதிக...ன அதிகாரம் கிடைக்கப் போகிறதென்பதை யுத்தேசித்து, அதி...பேர்கள் ஆங்காங்கு சென்று ராஜீய ஞானத்தைக் கற்பிக்கும் பிர...ங்கள் செய்து வருவதுபோல், பிற்காலத்தில் அபாயம் வராபோ...தை யுத்தேசித்து ஆங்காங்குள்ள பெரியோர்கள் இந்துமதத்தின் ...மைகளைத் தெளிவா யெடுத்துரைத்து, வித்தியாசங்கள் விலகும் ...ச் செய்யவேண்டும். இவ்வழியில் தேசாபிமானிகள் அதிகமான ...த்தையெடுத்துக் கொள்ளவும் வேண்டும். வருணச் சிரமதர்மம் ...று சொல்லிக் கொடுமை செய்யும் கொடிய உஷ்ணத்தை வாய்ப்...ல்போட்டு மறைத்துவிட்டு, மனம்போன வழிசென்று ஜனங்களை ...டவிடலா மென்பது முடியாத காரியமென்பதற்குத் தகுந்த சாட்...ம் கூறுகின்றோம்.

இந்தியாவில் ஜாதி வித்தியாசத்திற்கு சாவுமணி யடித்துவிட்...ம். இனி தடையில்லாமல் சவர்ப்காரியான ஆட்சியைத் தந்த...களென்று கேட்பதற் கிணங்கத்தக்க திருவண்ணாமலை சகா பரி...ன சபையில், மிஸ்டர் ஆதிமூலம் என்பவர் ஒரு கௌன்சிலராக ...ந்தபின்பு, எற்கெனவே மெம்பராக நியமனம் பெற்றிருந்த உயர்குல ...க்களில் அனேகர் சபைக்கு வராமலே நின்றுவிட்டார்களன்றோ? ...னால் நான்கு கூட்டம்வரையும் சரியானபடி ஆள்கள் வராத கார...த்தால் ஒரு விஷயமாவது எடுத்துக்கொள்ளப் படாமற் போயிற்று. ...வது கூட்டத்தில் சொற்பப் பேர்களே வந்து சேர்ந்தார்கள். ...போது மிஸ்டர் ஆதிமூலம் தாம் சபையில் ஸ்தானம்பெற்ற நாள்

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

முதல் மற்றக் கௌன்ஸில் மெம்பர்கள் கூட்டத்திற்கு வாராத விஷயத்தை கவர்ன்மெண்டுக்குத் தெரியப்படுத்த வேண்டி. முனிஸிபல் கௌன்ஸிலர் மூன்றுமாத காலம் வரையில் சபையில் ஆஜராகாத மெம்பர்களின் ஜாப்தா ஒன்றும் அவர்களின் காலவரையறை சபையில் எத்தனைகால மென்றும், தனக்குத் தெரிவிக்கும்படி வெகுதைரியமாக சேர்மெனவர்களைக் கேட்டார். இதற்குப் பதில்சொல்லி பரிகாரஞ் செய்யாம லிருக்கமுடியுமா?

நிற்க வெகுகாலமாய்ப் பஞ்சமர்களுக்குச் சென்னைச் சட்டசபையில் பிரதிநிதிகள் கிடையாது. சென்றவாண்டில் ஸ்ரீமான். எம். வி ராஜா அவர்கள் அஃ ஸ்தானத்தைப் பெற்றார். பெற்றதும் சென்னை மைலாப்பூர் வீரப்பெருமாள் கோயில் தெருவிற் கருகாமையில் வசிக்கும் பஞ்சமர்கள் பிணத்தை அத் தெருவழிதூக்கிச் செல்வது தடுக்கப் படுகிறதென்றும், பிணந்தூக்கிச் செல்லுதலை யாருந் தடுக்காதிருக்கும்படி கவர்ன்மெண்டார் ஏற்பாடு செய்யவேண்டுமென்ற ஒரு தீர்மானங்கொண்டு வந்தது யாவருமறிவர். சில தினங்களுக்கு முன் அவ்விடத்திலொருவர் இறந்துபோனர் அதை யாவரும் தடுக்காதிருக்கும்படி போலீஸ் கமிஷனர் டிப்டிக் கமிஷனர் போலீஸார் முதலான பேர்கள்வந்து அஃ பிணத்தை அஃ வீரப்பெருமாள் கோயில் தெருவழி தூக்கிச் செல்லும்படி உத்திரவுகொடுத்து சில போலீஸார்களையும் பந்தோபஸ்துக் கனுப்பி யிருக்கிறார்கள். இதனால் எல்லோரும் விழித்துக்கொண்டார்கள். கண்ணைப்பூச்சிக் காட்டுவது முடியாதென்பதே துணிபு. ஆகலால் இது சம்பந்தமான விஷயங்களை பொதுக் கான்பரன்ஸ்களிலும் சாங்கிரவிலும் ஆலோசனைசெய்து துவேஷங்க ளொழியும்படியான தீர்மானங்கள் செய்து கௌரவமும் தன்னலத் தியாகிகளுமாகிய சில இந்தியர்களைச் சேர்த்து ஒரு கமிட்டி யேற்படுத்தி அங்கங்கே செய்யவேண்டிய ஒழுங்குகளைச் செய்தாலன்றி புதிய அரசியல் சீர்திருத்தப்படி பத்து வருஷத்துக்குள் முழு ஆட்சி புரியும் யோக்கிதை கிட்டாது. இவ்விஷயத்தை இம்முறை திருநெல்வேலியில் கூடப்போகும் சென்னைமாகாணக் கான்பரன்ஸில் தக்கபடி ஆலோசித்து ஜாதி வேற்றுமை யொழியத்தக்கதோர் தீர்மானமுங் கொண்டுவந்து அதை மனப்பூர்வமாய் நிறைவேற்றி வைக்கும்படி கோருகிறோம்.

பத்திராதிபர்.

---



## ஞானப்பிரகாசம்.

இப்பெயர் புனைந்த தமிழ் நாவலின் 11-வது அத்தியாயம் 156-வது பக்கமுதல் 172-வது பக்கம் வரையுள்ள கதாங்கத்தின் சில விடங்களில் நமது நாடார்குல மரபிற்கு மாறுபாடான பழுஉமொழிகள் காணப்படுகின்றன.

அது குற்றமல்லவென்பது கற்றவர்கருத்து. காரணம் உமாவைக் கண்டுபிடிக்க ஞானப்பிரகாசன் மாறுவேடம் புனைந்து சென்றதேயாம். ஆயினும் இதுபோன்ற சிலபோலி யாதாரங்களைக்கொண்டு புறம்பேசுக் கலேஷிகட்கு அம்மொழி ரன்மையைத் தருமென்றெண்ணி நமது மித்திராதிபரும் நாமும் அஃ நாவலாசிரியர் ராய்சாயிப் திரிசிரபுரம் ஆ. பொன்னுசாமி பிள்ளை அவர்களுக்குக் கடிதமெழுதி அதனை மாற்றி வைக்கும்படித் தெரிவித்தோம்.

(30-4-20) சக்கிரவாரம் காலை 9-மணிக்கு அஃ நாவலாசிரியர் சென்னையில் என்னைச் சந்தித்தார். அது சமயம் நமது க்ஷத்திரிய மித்திரன் பத்திராதிபர் கனம். த. வி. துரைசாமி கிராமணியா ரவர்களும் எதிர்ப்பாராத வண்ணம் எங்களுடன் அங்கு வந்து சேர்ந்தார். ஒருவருக்கொருவர் வந்தனோபசாரத்துடன் அன்புபாராட்டி யமர்ந்தோம்.

ஞானப்பிரகாசம் நாவலாசிரியர் நவின்றதாவது "நான் இதுவரை எழுதிய நாவல்களில் ஒருவர் மனம்வருந்த எதுவும் எழுதவில்லை. சிந்தையாலும் செய்கையாலும் ஒருவருக்கு யாதொரு கெடுதலுஞ் செய்தேனில்லை. ஆனால் ஞானப்பிரகாச நாவலில் உமாவுக்காக நானெழுதியது பொருத்த முள்ளதேயன்றி உங்களினத்தவர்க்கு வருத்தத் திற்கிடமில்லையே, மேலும் சைவஞானப் பற்றுள்ள நான் பரமத் ஜோதி நாயனாரின் மரபினரைத் துவேஷிப்பேனா? இதை யறியாது நீங்கள் விடுத்த கடிதத்தால் கவலைகொண்டு இன்றுங்களைச் சந்திக்கேன் என்றார்."

நீங்கள் சொல்வது சரியே. உலகம் பலவிதம். கற்றோர் சிலர், கல்லாதார் பலர். கற்றிலரோ யாயினும் சாதிவேற்றுமை காட்டிக் குற்றங் கூற முன்வரும் துவேஷிகட்கு இதுபோன்ற மருஉச்சொல் நிறை நூல்கள் போலி யாதாரமாக நிற்கும். ஆகவின் தாங்கள் அக்காவ லிற் காணும் வார்த்தைகளை மாற்றுவதகியம் என்னு மெங்கள் வார்த் தையை அங்கீகரித்த நாவலாசிரியர் கைவசமிருந்த நாவலை எடுத்து அடுத்து அதிலுள்ள அப்பிரயோகப் பதங்களை பென்சலால் அடித்து

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

விட்டு அதற்குபதில் வேறுவார்த்தைகளமைத்து புஸ்தகத்தை என்னிடங்கொடுத்து "இதில் திருத்தி எழுதியதுபோல் 156-வது பக்கமுதல் 172-வது பக்கம்வரை வேறு காபிகள் அச்சியற்றி பயிண்டான புஸ்தகங்களிலும் பயிண்டாகாதிருக்கும் காபிகளிலும் அதைச்சேர்த்து விடுகிறேன். இதுவரை சொற்பப்புஸ்தகந்தான் வெளிசென்றளது. அதற்கும் திருத்தி யச்சிட்டக் காபிகளை யனுப்பிச் சேர்த்துக்கொள்ளும்படி ஏற்பாடு செய்கிறேன்" இவ் விஷயத்தை மித்திரனில் பிரசுரப்படுத்திவிடுங்கள்" என்று திருப்தியான பதிலுரைத்துச் சந்தோஷத்துடன் தம் மில்லமேகினர். ஷை நாவல் வேண்டுவோர் (தி. ம. பொன்னுசாமி பிள்ளை 102, வரதா முத்தையப்பன் தெரு, சென்னை) என்ற விலாசத்திற்கெழுதி வி. பி. மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

இங்கோர் முக்கியமான விஷயமொன்றுரைக்க என் மனம் நாடுகின்றது. அதாவது ஷை நாவலாசிரியருக்கு கொழும்பிலிருந்து கையொப்பமில்லாமல் வெகு விகற்பாவதூறான வார்த்தைகள் நிரம்பிய கடிதமொன்று ஷை விஷயமாக யாரோ ஒருவர் எழுதியிருக்கின்றாராம். விஷயம் நம்மினத்தைக் குறித்துள்ளதால் ஷை நாவலாசிரியர், உங்கள் மரபினரில் யாராவதொருவரா யிருக்கலாம் என்று அசாமுசமிழ்ச்சியாகத் தெரிவித்தார். இதென்ன கொடுமை. தாறுமாறாகக் கடிதமெழுவிட்டால் சந்தோஷம் வந்து விடுமா? அவ்வித ஆற்றலுடையவர்கள் நம்மைத் தூஷிக்கவரை அல்லது தூஷிப்போரைச் சண்டிக்கவோ, தண்டிக்கவோ, நம் ஜனசமுகத்திற்கு சாய்பீடமாக நிற்கும் மகாஜன சங்கத்தலைவர்களுக்கு அறிக்கையிட்டால் அவர்களல்லவோ அம்மனுவை யங்கீகரித்து அதன்படிச் செய்ய முன்வரவேண்டும். எதற்காக நமது ஜனசங்கம் ஸ்தாபித்திருப்பது. இங்ஙனே போகியாமல் சொற்பகாரியத்திற்கெல்லாம் அவரவர் மனப்போக்கின்படி வழிவகையின்றி கடிதமெழுதி சுண்ணியக் குறைவைத் தேடுவது நன்மையாமா? பொறுக்க முடியாத வறுமை வந்தபோதும் பொறுமைகொண்டு நிற்பதல்லவா அருமையான பெருமையைத் தரும். ஓர் விஷயத்தைக் குறித்து ஒருவருக்குக் கடிதமெழுத நேரினும் விஷயத்தையோட்டி விகற்பத்தைக் கூட்டி எழுதலாமா?

நாடார்குல மித்திராபிமானிகளே! நற்குண சீலர்களே! வழியே யேதுக வழியே மீளுக என்ற நமது அதிவீரராமபாண்டியன் நீதியைப் படித்தும் நாம் அற்ப விஷயத்துக்கெல்லாம் ஆத்திரப்பட்டு அநீதியைத்தொடுவது அடாது. ஆதலின் ஞானப்பிரகாச நாவல் விஷயமாக அதன் ஆசிரியருக்கு இனிமேல் நம்மினமெம னிகள் யாதொரு கடிதமும் எழுதாதிருக்கக் கோருகின்றேன்.

ச. சு. சங்கரலிங்க நாடார்.

---



# கடிதங்கள்.

## கக்ஷண நாடார்கள்.

மேற்குறித்த தலையங்கத்துடன் யானெழுதப்புகு மிச்சிறிய வியாசத்தில் குற்றமான பதப்ரயோகங்க ளிருப்பினவற்றைக் கிள்க்கி. சாராம்ஸத்தின் நன் நோக்கங்களை க்ரஹித்துக் கொள்ளவேண்டியது ஆன்றோர் கடமை.

நமது நாடார் குலத்தினர் ஏராளமாய் வசிக்கும் பகுதிகளில் திருநெல்வேலி ஜில்லாவே, ப்ரதானமெனக் கூறல் மிகையாகாது. அப்பகுதிகளில் வசிக்கும் நாடார்கள் விசேஷமாய் செல்வத்திலும் அதிகார அந்தஸ்திலும் சிறந்தவர்களா யிருந்தலோடு, அநேகர் பெரிய லிலச்சுவான்களாயு மிருக்கின்றனர். ஆயினும், நம்மில் தற்கால நவீன நாகரீகத்திற் கேற்ப, சீர்திருத்தப் படவேண்டிய குறைகள் பல விருக்கின்றன. அதாவது நம் ஜனத்தொகையில் சராசரிக் கணக்கைக் கவனித்தால் நம்மில் கல்வி நிரம்பவும் குறைவாயிருக்கிறது. அன்றியும், நம்மிற் கல்வி கற்றவர்களுங்கூட "கற்க, கசடறக் கற்றவை கற்றபின் நிற்கவதற்குத்தக" என்றபடி தாம் கற்ற கல்வியை வர்த்தகம், கைத்தொழில், உத்யோகம்போன்ற பிரயோஜன வழிகளிற் ப்ரயோகிக்காது, வீட்டிலேயே வாழா விருக்கின்றனர். காரணமென்னையெனின், தங்களுக்கு ஏராளமான ஸ்தாவர ஜங்கமச் சொத்துக்க ளிருப்பகாயும். அதனால் தாங்களெவ்வித தொழின் முயற்சிகளையுங் கவனித்தல் அனவஸ்யமென்றும், ஒரு சமயம் அவ்விதம் முயற்சிக்கநேர்ந்தாலது வும் கௌரவக் குறைவே யென்றுங் கருதுவதேயாகும்.

மேலும் நம்மிற் பலவர்த்தகர்களைக் காண்பதரிதா யிருக்கிறது. தற்காலம் வர்த்தகத்தில் மேம்பாடடைந்துள்ள நாட்டுக்கோட்டை செட்டிமார்களும், முகமதீயர்களும், வர்த்தகச் சிரோரத்னங்களாய் விளங்கும் நம் வடநாட்டுச் சகோதரர்களும், பலதேய வர்த்தகத்திலதி அதியுன்னத நிலைமைக்கு வந்துவிட்டனர். மேற் குறித்தவர்களில் லக்ஷக்கணக்கான ஆஸ்தியை யுடைய ஸ்திதிவந்தவர்களுங்கூட, தங்கள் அருமைப் புதல்வர்களை, "தம்மிற்றம் மக்களறிவுடைமை மாநிலத்து மன்னுயிர்க் கெல்லாமினிது" தங்களைவிட உன்னத ஸ்திதிக்குக் கொண்டுவர வேணுமென்ற நன்னோக்க அவாமேலீட்டால், மக்களை வர்த்தகத் தொழிலுமின்றி வீட்டிலிருத்தி, வாழ்நாளை வீணாக்க இடங்கொ

டாமல், பல்வேறிடங்கட் கனுப்பி, வர்த்தகமுறையில் தேர்ச்சிபெற செய்து பிரபல வர்த்தகர்களாக்கி விடுகின்றமையால், அந்த வாலிப களும் "எய்தற்கரிய தியைந்தக் காலங்கிலேயே, செய்தற்கரிய செயல் என்ற ஆன்றோர் வாக்கின்படி, தங்கள் நல்லதிர்ஷ்ட வசத்தாற் கிடை த்த சந்தர்ப்பத்தைத் தவறவிடாது ஊக்கத்துடன் முயற்சித்து, ஈச னருளால் ஏராளமான பொருளைச் சம்பாதித்து, சிறப்புற்று வாழ் லோடு, ஏற்கனவே தங்கள் முதியோராற் க்ஷேமித்து வைக்கப்பெற் செல்வத்தையு மென்மேலும் அபிவிர்த்திசெய்ய ஹேதுவுள்ளவர்களா மாகி விடுகின்றனர்.

இவர்களிவ்விதம் பல விடங்களுக்கும் போய் அவ்வவ்விடத்தி பழக்கவழக்க, நடையுடை பாவனை நாகரீகத்தை நன்குணர்ந்து வரு தால், அவர்களது சொந்த ஊர்களில் பள்ளிக்கூடங்களையும், வாச சாலைகளையும், சங்கங்களையும் ஸ்தாபித்து, தங்களுக்குப் பிற்பட்ட சிறுவர்களும் துவக்கமுதலே தங்களைப் பின்பற்றக்கூடிய மார்க்க களைக் கற்பித்து விடுகின்றனர்.

நமது தென்பகுதி களிலோவெனின், "கிணற்றுத் தவளைக்கு காட்டு வளப்பமேன்" என்றபடி தந்தைமார் தங்களுக்குள்ள செல்வச் செறுக்கை ப்ரமாதமாய் மதித்து, தமதருமைப் புத்ரர்களை ஏதாவ தோர் தொழிலிற் றலையிட்டு சற்றுசிரமமெடுத்துக் கொள்ளவோ அல்லது அக்கம் பக்கம் நாலைந்துமைல் தூரத்தில் நல்ல பள்ளிக்கூட மிருந்தால் ஆங்கனுப்பி கல்வி 'பயிலவிடவோ மனஞ்சகியாதவரா யிருக்கின்றனர். இப்படிச் செய்கிற தந்தைமார் தாங்கள் நினைக்கிறபடி தம்மக்கட்கு எட்டுணையும் நன்மை செய்தவ ராகாமல்,

"பெற்றவர் சிறியவய தினிற்றங்களை
பிள்ளைகட் கறநெறி யொழுக்கங்
கற்றிடச் செய்தற மக்கொரு பெரிய
கடமை யேன்பதை யுணர்கிலராய்
மற்றவர் தங்கள் மனத்தினுக்கிசைந்த
வாறு செய்திட விடுவரேற்
குற்றமங்கவர் மேலிலை யவர்ப்பயந்த
குரவர் மேலாகு'மென்பரே." (C. W. C.)



என்றபடி அப் பிள்ளைகள் குடும்ப காரியத்தை நிர்வகிக்கவேண் டிய பிராயம் வந்ததும், இல்லற தர்மத்தைச் செவ்வனே நடத்தத் திற மையற்றவராக்கி விடுகின்றமையால், தம் மக்களுக்குத் தீங்கிழைத்தவ ரேயாகின்றனர். மேலும் அந்த வாலிபர்கள் அவ்விதநிலைமையை விரும் பதாற்றான், தங்கள் முற்பிதாக்கள் தெய்வாதீனமாகவோ, அல்லது அரும்பிரயாசையாலோ சம்பாதித்துவைத்த செல்வமானது இவர்க ளாதீனத்திற் குட்பட்டதும், அநேகர் சிலகாலத்திற் செல்லாம் மித மிஞ்சிய கடன்பட்டு "பொருளாட்சி போற்றாதார்க்கில்லை" யென்ற படி சொத்துக்களைய் மிழந்து கஷ்டமுற நேர்ந்துவிடுகிறது. ஆனல் வாலிபபிராய முதலே கஷ்டப்பட்டுழைக்க கற்றுக்கொண்டு ஏதாவது பொருள் வருவாயைக் கண்டு பிடித்துக்கொண்டால் பிந்தியகாலத் திற்கு ரெம்பவும் ஒத்தாசையா யிருக்குமன்றோ?

வாலிப சகோதரர்களே! உலகத்தி லொவ்வொரு ஸமூகமும் கல்வியிலும், செல்வத்திலும், நாகரீகத்திலும் நாளுக்குநாள் முன்னே றிச் செல்கிறது. காலமோ நமக்காகக் காத்துநிற்க மாட்டாது. நம் பகுதிகளில் ஒற்றுமை யென்றபயிரை ஸ்திரமாய்நாட்டி அதற்குப் பாதக மேற்படாமல் 'சங்கம்' என்ற பலத்த வேலியிட்டு, 'உபன்யா சம்' என்றநீரை அடிக்கடி பாய்ச்சி நம்முன் ஒற்றுமையை நிலைநிறுத்த முயலுங்கள். நம் சிறுவர் சிறுமிகளை பலவந்தமாயாவது கட்டாயப் படிப்புக் குட்படுத்துங்கள். ஒவ்வொருகுக் கிராமங்களிலும் பால்யர் சங்கங்களையும், இலவசவாசக சாலைகளையும், பள்ளிக்கூடங்களையும் ஸ்தாபிக்க முயல்வதைத் தத்தமது சொந்த கடமையாகக் கொள்ளுங் கள் பல பத்திரிகைகளையும் வாங்கி வாசித்து உலகின்போக்கைக் கவ னியுங்கள். உலகில் "இல்லாரை யெல்லாரு மெள்ளுவர். செல்வரை யெல்லாருஞ் செய்வர் சிறப்பு" என்னும் 'பொருளில்லார்க் கிவ்வுலக மில்லை' என்னும் தெய்வப்புலமை திருவளம் பற்றியபடி செல்வமே சிறந்ததா யிருப்பதால் நன்மையான வழிகளாற் பொருள் ஸம்பா திக்க முயலுங்கள் எல்லாம் வல்ல கருணைநிதியாகிய ஜகத்ரக்ஷகன் நமது முயற்சிகளைக் கைகூடச் செய்வார்.

கெ. கலியாண சுந்தரநாடார்,
கொளும்பு.

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

## நமது கடமை.

கனவான்களே! கொடைத்தற்காகிய மானிட ஜென்மம் எடுத்தவர்கள் அதன் பலனை அடைவதைவிட்டு பல்வேறுவழிகளிலும் முன்றிலது சரியாகுமென அறிந்திருக்கும் நாம் நமது கடமையைச் செய்யத் தாமதிக்கலாமா?

சூரிய சந்திரர்களால் பிரகாசம் வருகிற ஒவ்வொரு நாட்டாரும் தங்கள் பிறப்புரிமையாகிய சுதந்தரத்தை அடையச் செய்யும் அசாத்தியமான காரியங்களும் மார்க்கங்களும் நமக்குத் தெரியவில்லையா?

இந்த சந்தர்ப்பங்களில் நாம் செய்யவேண்டிய வேலைகளும் நமது கடமைகளும் சொற்பமல்லவே. அதை எல்லாம் நமக்கு கிடைக்கிறதும் சந்தர்ப்பங்களை கைவிட்டுவிட்டால் பின் எப்போதுதான் செய்வதென உத்தேசிப்பார்? உறங்கின காலத்தில் ஊர்வழிபோனவன் அறிந்த காலத்தில் அதைத்தேட வேண்டியதில்லை வெறும் பழமொழி. நாம் அறியாததல்லவே. ஆதலால்.

மனிதராய்ப் பிறந்த ஒவ்வொருவரும் தம்மாலியன்றவரை இனைஞர்மானம் தேசாபிமானம்கொண்டு, தன்குலத்திற்கும் தேசத்திற்கும் தொண்டு செய்யவேண்டிய கடமையல்லவா? இதன்பொருட்டு நாம் எண்ணிக தியாகம் செய்துள்ளோமென்பதை ஒவ்வொருவரும் இச்சிக்கவேண்டும். நமக்கு கிடைக்கும் சௌகரியமான வழியொன்றையும் நாம் விரைவில் விட்டுவிடக்கூடாது. அதை நாம் பிரயோஜனத்திற்கு அவசியம் கொண்டுவர வேண்டும். நமது காலத்தின் ஒவ்வொரு விநாடியும் பொன்னிலும் விசேஷமானது. கடந்துபோன ஒரு விநாடி கோடிகோடியாய்க் கொடுப்பினும் திரும்பப்போகிறதில்லை.

இத்தகைய அருமையான காலத்தை வீணாகக் கழிப்பதைக் கவனியாது மற்ற விஷயங்களிலேயே செல்கின்றோம். அந்தோ! சமுகமே! கருதுபோகும்வழி தெரிகிறதே யல்லாமல், பூசணிக்காய் போவது தெரியவில்லையோ. நாம் எதற்குப்பிறந்தோம்? கடவுள் நமக்கிட்டுள்ள கட்டளை நிறைவேற்றினோமா? அல்லது நாம் வீணுக்கா பிறந்தோம்? தெய்வீகமே! கருணாகரா!! எப்படியோ ஜாதிக்கு உழைக்கின்றனர் பெருங்கால் கடமையைச் செய்ய உற்சாகமூட்ட பாராள்வேண்டும். அமிர்தினு மினிய தமிழ்மொழி வளர்க்க அண்ணலாம் பாண்டியன் தன்வழி வந்திடும் அரசர் குலத்து அறிஞரே, நாம் தேசாபிமானம் குலாபிமானம் கொண்டிருக்கிறோமென்றி அதன்வழிச் செல்கின்றோ



மில்லை! அதன் பலன் அடைந்தோமில்லை!! நம்குல மகான்கள் நம் வளர்ச்சியை உன்னி ஆராய்ந்து தெளிந்து தீர்க்க தரிசனத்துடன் மகமையெனும் ஷேர்பண்டு நமக்கு வழிகாட்டியாய் ஏற்படுத்தினார்கள் அது நம்மை மிக்க மகிமை படுத்திக்கொண்டு வருகிறது. அக்கைய நிறைந்த சிலாசாசனம்போன்ற மகமையைக்கூட சில ஊர்களில் ஒற்றுமை குறைவால் சரிவர நடத்தாமலிருக்கின்றோம். இப்படியிருந்தால் நாம் மேம்பாடு எக்காலம்? எப்படி? ஆரம்பத்தில் சீர்திருத்தச் சட்டமாய் சில பாகங்கள் அநுஷ்டானத்திற்கு வந்தது விட்டது அதில் நமக்குள்ள பாகத்தை நாம்பெற வேண்டுமல்லவா?

ஆகையால் நமக்குள்ளிருக்கும் அற்பவேற்றுமைகளையும் விட்டு கைவிரல் கண்ணில் பட்டால் துண்டித்துவிட மாட்டோமல்லவா நம் குலத்தையும் தேசத்தையும் செல்வாக்குண்டாகும்படி உள்ள வேலையை செய்யவும், ராஜாங்கத்தில் நமது பாகத்தை பெறவும் வேலையைச் செய்யவேண்டும், நாடார் மகாஜன சங்கத்துக்கு ஆதரவளிக்கவேண்டும்? சங்கத்தின் பிரசார வேலைக் கதிட்டிபுடன் ஊக்கமுடுக்கவேண்டும். உழைப்பு முறப்பக்கல காணப்பாதுலின்றி தாமூரது குற்றபவர், தெய்வக் காலாகா தெளிவும் முயற்சிகன் மெய்யவருந்தக் கூலிதரும், நம் முயற்சிக்கு ஊக்கத்தையும் உற்சாகத்தையும் தந்து வெற்றிபெற எம்பெருமான் கருணைபுரிவாராக. சுபம்! சுபம்!!

ப. வே. தா. மாரியப்ப நாடார்,
ஆண்டிபட்டி.

---

## பெருநாழி.

நாடார் கலாசித்தி விர்த்தி சங்கம்:—இவ்வூரில் (1-3.20-ல்) நாடார் கலாசித்தி விர்த்தி சங்கம் என்ற ஓர்சங்கம் நாடார் குலப்பாலியர்களால் ஸ்தாபிக்கப்பட்டு நாளது (1-4-20-ல்) நாடார்கள் பேட்டை முன்பக்கத்தில் அமைக்குள்ள அலங்காரக் கொட்டகையில் முதலாவது கூடடம் வெகு விமரிசையாய்க்கூடி நடைபெற்றது.

இலக்கண இலக்கிய புராண ஆராய்ச்சி மிகுந்துள்ள முத்துச் செல்லையாபுரம் ம-ா-ா-ஸ்ரீ கவிராயர் சங்கமுத்துப் பிள்ளை அவர்கள் அன்று தினம் மாலை 5-மணிக்கு மேளதாளத்துடன் அழைத்து வரப்பட்டு, கவிராயர் ஆ. குமரையா நாடார், பி. முருகேச நாடார் இவர்



Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

தெரிந்தவிஷயம். நம் பால்யநாடார் சங்கத்தின் சந்தாப்பணம் சரிவ வசூல் செய்யாமலும் பைசாப்பண்டு வசூல் செய்யாமலும் இருப்ப விசனிக்கத்தக்க விஷயமாகும். இச் சங்கம் விஷயமாய் கனம் பெ. பெ ம. பாண்டிய நாடார் அவர்கள் முயற்சியும் நல்லெண்ணமும் புகழ் சிக் குறியதே. கனம் பிரசிடெண்ட் அவர்களும் செக்ரட்டெரி யவ களும் இனிமேலாவது தக்க கவனம்செலுத்தி வேலை செய்யும்ப வற்புறுத்துகிறோம். சங்கங்க ளிவ்விஷயத்திலும் நமது பொதுஜ க்ஷேமங்களின் பொருட்டும் தனது இளம்பிராயத்திலேயே (16-வயத முதல்) பாடுபட் டுழைத்துவந்த திருமங்கலம் மிஸ்டர் வீ. ரத்தின சபாபதி சென்ற 'தைமீ' தனது 19-வது வயதில் பொன்னுலகடை தனர். இச் சங்கமானது தனது சொந்த உபன்னியாசர்களில் ஒ வரை இழந்துவிட்டது நமது ஜனசமூகத்துக் கேற்பட்ட ஒரு கஷ் மென்றே கூறுவோம்.

முக்கிய ஞாபகச் சினனம்:—பிறையாறு ஸ்ரீமான் வெ. பொன் னுச்சாமி நாடாரவர்கள் காலகதியடைந்து விட்டனரென்ற செய்தி நம் மித்திரன் பத்திரிகையிலும் மற்றும் சகல தினசரிப் பத்திரிகைக ளும் விபரமாகப் பிரசுரிக்கப் பட்டிருந்தது. அவர் இறந்த தினத்தன் மதுரையிலுள்ள சகல நாடார் கடைகளும் அடைக்கப்பட்டு தொழி களும் நிறுத்தப்பட்டு அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளப்பட் டது. அவர்கள் நமது நாடார் மகாஜன சங்கத்தின் பிரசிடெண்ட் ஆனதாலும் நமது ஜனசமூகத்தை சகல வழிகளிலும் ஒற்றுமையுடன் முன்னுக்குக் கொண்டுவர வேண்டுமென்று தக்க முயற்சியெடுத்த வேலைசெய்து "நாடார் ஜனசமூகம்" என்று ஒரு ஜாதியார் இந்திய வில் இருப்பதாக சகல ஜனங்களும் கவர்ன்மெண்டாரும் தெரிந்த கொள்ளும்படி செய்திருப்பதாலும் மதுரையிலுள்ள நாடார்கள் அனை வோர்களும் மிக்க நன்றிசெலுத்தக் கடமைப்பட்டுள்ளோம். அப்புண் ணிய புருஷரின் ஞாபகார்த்தமாக மதுரையில் வாசிக்கக்கூடிய மாண வர்கள் தங்கிப் படிப்பதற்காக ஒரு ஹாஸ்டலாவது அல்லது V. பொ ன்னுசாமி நாடார் மெமோரியல்லைப் பரரியாவது கூடிய சீக்கிரம் ஏற் படுத்தி கனம் நாடார் அவர்களின் ஆத்மாவைத் திருப்திசெய்வதே அவருக்குச் செய்யவேண்டிய பிரதிப் பிரயோஜனம் என்பதை மது ரைநகர் வாசிக ளனைவரும் மறவாதிருப்பாராக.

நாடார்குல ஊழியன்.

---



## திருமங்கலம்

க்ஷத்திரியகுல கல்விச் சங்கம்:—3-வது பொதுமீட்டிங் 14-4-20 ...ன்கிழமை மாலை 7-மணிக்கு ஷை சங்கம் ஸ்தாபித்திருக்கும் எட் ...ர் திருவிழா மண்டபத்தில் இங்கர் போஸ்ட்மாஸ்டர் ஸ்ரீமான் வேதமுத்து நாடாரவர்களை அக்கிராசனரா யிருக்க பிரசிடெண்ட் ...டர் K. பாலசுப்பிரமணிய நாடார் செய்த பிரரேபனையை, செக் ...டேரி மிஸ்டர் K. S. M. மலையப்ப நாடாரால் ஆமோதிக்கப்பெற்று ...க்கிராசனர் ஆசனத்திலமர கடவுள் வணக்கம் மிஸ்டர் மா. முத்து ...லைய நாடாரால் பாடப்பெற்று, அக்கிராசனர் ஆரம்பப் பிரசங்கம் ...வகு குதூகலமாய்ப் பேசினர்.

(1) ராஜ விசுவாசம் (2) சங்கரிபோர்ட் (3) நமது கடமை (4) ...பிரகாம் லின்க்கன் ஜீவிய சரித்திரம் (5) கல்வி (6) முயற்சி (7) ஒற் ...றுமை என்னும் விஷயங்களைப்பற்றி பசுமலை ஹைஸ்கூல் மெட்ரிகுலே ...ஷன் மாணவர், S. சிதம்பர நாடார், செக்ரடேரி K. S. M. மலையப்ப ...நாடார், S. P. முத்தையா நாடார், மதுரை அமெரிக்கன் காலேஜ் ...ண்டர் மீடியேட் வகுப்புமாணவர் S. சவுந்தர பாண்டிய நாடார், ...A. பால சுப்பிரமணிய நாடார், V. பாலகுரு நாடார். P. துரை ...ராஜ் நாடார் இவர்களால் முறையே இனிய தமிழ்நடையில் பல மேற் ...கோள்களுடன் பேசப்பட்டு, பிரசிடெண்ட் மிஸ்டர் K. பாலசுப்பிர ...மணிய நாடாரவர்களை நமதூர் சீர்திருத்த விஷயமாய்க் கலந்து பேசிச் ...பிரசப்படுத்த இச் சங்கத்தினதாவில் அனுப்பவேணுமாய் மிஸ்டர் ...மா. மு. சுந்தரநாடார் பிரரேபனை செய்ய, வைஸ்பிரசிடெண்ட் ஸ்மி ...ர் அ. அ. சுந்தர நாடாரால் ஆமோதிக்கப்பட்டுச் சபையோர் அத ...ரவுடன் தீர்மானிக்கப் பெற்றது. அக்கிராசனர் அவர்களால் தமது ...அபிப்பிராயத்துடன் முடிவுரை சொல்ல, பிரசிடெண்ட் மிஸ்டர் K. பால சுப்பிரமணிய நாடாரால் வந்தனோபசாரஞ் சொல்லி அக் ...கிராசனருக்குப் புஷ்பமாலைசூட, மிஸ்டர் மா. முத்துமலைய நாடாரால் ...கடவுள் வாழ்த்தும் பாடப்பட்டு இரவு 10-மணிக்கு மீட்டிங் செவ் ...வனே முடிவு பெற்றது. எல்லாம்வல்ல இறைவன் அருள்புரிவாராக.

K. பால சுப்பிரமணிய நாடார்.

---



Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

## சங்கரர் வெண்பா.

### கடவுள் வாழ்த்து.

பங்கமுறத் தேவரைச்செய் பாதகனும் ராவணனால்
சங்கையிலா தேடினர்க்தென் சங்கரனே—பங்களமாய்
கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றா ளுெழா ரெனின். (1)

### வான் சிறப்பு.

புத்தியிலோர் தேசவளம் போக்கி யறிவுடையார்
சத்தியத்தால் பெய்தாக்குஞ் சங்கரனே—சொத்தை
கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய் மற்றங்கே
யெடுப்பதூஉ மெல்லா மழை. (2)

### நீத்தா பெருமை.

கெஞ்சிடவு வாராக் கிரார்பாணத் தால்வருணன்
தஞ்சமென வந்தடைந்தான் சங்கரனே—துஞ்சாக்
குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்த லரிது. (3)

### அறன் வலியுறுத்தல்.

இந்திரனும் பட்ட மிருனிலத்தோர் வேந்தனுக்கு
தந்துகொம்பு தாங்கினரே சங்கரனே—நந்தா
அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானே டூர்ந்தா னிடை. (4)

### இல்வாழ்க்கை.

மிக்கவறு மைப்பட்டு மெய்யுணர்ந்து வீடுற்றான்
தக்கது சேலனென்போன் சங்கரனே—வொக்கா
இயல்பினு னில்வாழ்க்கை வாழ்பவ னென்பான்
முயல்வாரு ளெல்லாந் தலை. (5)

### வாழ்க்கைத் துணைநலம்.

தீதுவராக் கார்க்கிருந்த சீதையைமுன் ராவணனுஞ்
சாதுவென வந்தெடுத்தான் சங்கரனே—வோதுஞ்
சிறைகாக்குங் காப்பெ வன்செயு மகளிர்
நிறை காக்குங் காப்பேதலை. (6)

(இன்னும்வரும்)

க. சு. அருணகிரி நாடார்.

---



## நமது மித்திரன் வரவேற்பும் வாழ்த்தும்

### விருத்தம்.

ஏடார் மலர்க்காவுரையு நல்லூரு முத்தெனுங் தமிழ்க்கடனீரைய்
பீடார் விஷயப்புய லுண்டறிவெனும் பெருமழையது பெய்து
கோடாரதியாக் கோடையை நீக்கிநற் குணக்கல்விப் பயிரோற்று
நாடார் குலமித்திர நின்றன்பேட்டியை நானனி கண்டனனே.
வருவாய் கரமிசை மகிழ்வா யிருந்துனி வயங்குவாய் திங்கடொருங்
திருவாய் திரந்தினிதாகிய மொழிபல செப்புவாய் செந்தமிழோ
குருவாய் வந்தென வந்தவனேபுக ழோங்கு நங்குலத் தினர்தங்
குருவாய் நின்றுப தேசமே செய்துமுன் கொடுவருங் கொற்றவனே.
உலகமீ தாயிரத்துத் தொளாயிரத்துப் பத்தொன்பதிலே பிறந்து
விலகிய பூருவபக்க நன்மதியென வினிதுடனே வளர்ந்து
குலவிய திசைதொரு முலவியே புகழது கொண்டகமே மகிழ்ந்து
திலகமெனப் புவியுளவரை வாழ்த்தி யென்றிருக் குலமித்திரனே.

---

### விடுகதை வினு.

எட்டெழுத் தற்றதொரு நகரமா மங்கரோ
நிறைவாச முற்ற தலமா
மிசைக்கு மொன்றும் மூன்றுநான்குந் தண்ணீரதா
மெட்டு மட்டும் மோரணியாம்
நெட்டெழுத்தா மாறு மேழெட்டும் புரிசையாம்
நோராறு மெட்டு மானல்
நிறைவுற்றவோர் காலமாம் நான்கு மெட்டுமே
நேரிற் சைன்யத்தின் பேராம்.
குட்டெழுத்தா மொன்று மெட்டுஞ் சிலேடையாங்
குறித்தமுத லேழு மெட்டுங்
கூடிற்றடத்தில் வாசஞ் செய் பிராணியாங்
கூறுமுத லன்கு வரையுங்
திட்டமாய்ச் சேர்ப்பினது சதிப்பின் பெயராக்
திகழொன்றைந் தாறு மாறுந்
செப்புமாச் சர்யக் குறிப்பாமில்லூர்ப் பெயரைத்
தெரிந்து விடை கூறுவீரே.

A. M. P. K. P. S. S. காரியம் A. T. M. நாடார்.

---

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

## ஆடவர் தருமம்.

அரியது கேட்கின்வரி வடிவேலோய்
அரிதரிது மானுட ராத லரிது
மானுட ராயினுங் கூன்குருடு செவிடு
பேடு நீங்கிப் பிறத்த லரிது
பேடு நீங்கிப் பிறந்த காலையும்
ஞானமுங் கல்வியு நயத்த லரிது
ஞானமுங் கல்வியு நயந்த காலைத்
தானமுந் தவமுந் தான்செய லரிது
தானமுந் தவமுந் தாஞ்செய்வ ராயின்
வானவர் நாடுவழி திறந்திடுமே.

கருத்து. அரியதனைக் கேட்பாயின் நீண்டவடித்த வேலையுடையவனே மனிதராகப் பிறப்பது அரிது. மனிதராகப் பிறந்தாலும் கூன், குருடு, செவிடு, பேடு யென்பவற்றை யொழித்து பிறப்பது அரிது. கூன் குருடு, செவிடுபோ டொழிந்து பிறந்த காலத்திலும் ஞானத்தையும், கல்வியையும் விரும்புதல் அரிது. ஞானத்தையும், கல்வியையும் விரும் பினகாலத்திலும். தானத்தையும் தவத்தையும் செய்வது அரிது. தானத்தையும் தவத்தையு் செய்வாராயின் அவர்களுக்குச் சுவர்க்க லோகம் தானகவே வழிதிறந்து விடப்படும் எனவும்.

"எண்ண ரியபிறவி தனின் மானுடப் பிறவிதா
னியாதினும் மரிதரிது கா
ணிப்பிறவி தப்பினு லெப்பிறவி வாய்க்குமோ
வேது வருமோ வறிகிலேன்
கண்ணக லிலத்து நானுள்ள பொழுதே யருட்
ககனவட் டத்தி னின்று
கா லூன்றி நின்றுபொழி யானந்த முகிலொடு
கலந்து மதியவச முறவே
பண் ணுவது நன்மையிக் நிலைபதியு மட்டுமே
பதியா யிருந்த தேசப்
பவுரிகுலையா மலேகௌரி குண்டலி யாயி
பண்ணவித னருளி னலே
விண் ணிலவு மதியமுத மொழியாது பொழியவே
வேண்டு வேனுமதடிமை நான்
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்
வித்தகச் சித்தர் கணமே."



[illegible]ருத்து. எண்ணுதற்கரிதாகிய பிறவிகளுள் மனிதப்பிறவி எல்லாப் [illegible]றவிகளினும் மிகவும் அரியது இந்த ஜென்மந் தவறினால் எந்த ஜன் [illegible] கிடைக்குமோ, என்ன அநர்த்தங்க ளுண்டாகுமோ தெரிகிலேன். [illegible]தலால், இடமகன்ற பூமியில் நான் இருக்கும்பொழுதே திருவருளா [illegible]ய ஆகாய மண்டலத்தில் நிலைத்துநின்று இன்பமழையைப் பொழியா [illegible]ன்ற மேகத்துடன் சேர்ந்து என் அறிவானது பரவசப்படும்படி [illegible]செய்வது நன்மையாகும். இந்த நிலையில் அழுந்துகிறவரைக்கும் என [illegible]கு இடமாயிருந்த தேசமாகிய பவுரிகூடத்துக் கலையாமல் கௌரி [illegible]ய குண்டலிசத்தியென்கிற தேவியினது கிருபையால் சிதாகாசத்தில் [illegible]லைபெற்றிருக்கிற சந்திரனிடத்திலுள்ள அமிர்தமானது இடையறாது [illegible]பெய்ய உமதடிமையாகிய நான் விரும்புவேன் என்ற தாயுமானவர் வாக் [illegible]ன்படி பெறுதற்கரிய மானுடதேகம் பெற்றும் அறம், பொருள், இன் [illegible]ம், வீடு என்னும் சதுர்வித புருஷார்த்தங்களையும் அடைவதற்குக் [illegible]காரணம் இல்லறமாகையால் ஔவையும், இல்லறமல்லது நல்லற [illegible]மன்று என்றும் பிரமசாரி, கிரகஸ்தன், வானப்பிரகஸ்தன், சந்நியாசி என்னும் நான்கு ஆச்சிரம வாசிகளுக்குள் கிருகஸ்தாஸ்ரமத்திலுள்ள [illegible]வன் மற்றைய மூன்றுச்சிரமத்தை யுடையவர்களுக்கும் உண்டி முத லானவைகளைக் கொடுத்து உபசரிப்பதற்கு மிகவும் உபயோகமுள்ளவ [illegible]னதலால்,

"இல்வாழ்வா னென்பானி யல்புடைய மூவர்க்கு
நல்லாற்றி னின்ற துணை."

இல்லறத்தோடு கூடிய வாழ்வகனென்று சொல்லப்படுவான். அறவியல் பினையுடைய எனை மூவர்க்கும் அவர் செல்லும் நல்லொழுக்க நெறிக் கண் நிலைபெற்ற துணையாம், என்றும்,

"துறந்தார்க்குந் துவ்வாதவர்க்கு மிறந்தார்க்கு
மில்வாழ்வா னென்பான் றுணை"

சகல பற்றுகளையும் விட்டுத் துறக்கப்பட்டார்க்கும், நல்கூர்ந்தார்க்கும் ஒருவருமின்றித் தன்பால் வந்திறந்தார்க்கும் இல்வாழ்வானென்று சொல்லப்படுவான் றுணை என்றும்,

"தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கலு னென்றாங்
கைம்புலத் தாறோம் பறலை"

[illegible]தர், தேவர், விருந்தினர், சுற்றத்தார் தானென்று சொல்லப்பட்ட [illegible]ந்திடத்துஞ் செய்யும் அறநெறியை வழுவாமற் செய்தல் இல்வாழ்



Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

வானுக்குச் சிறப்புடைய அறமாம் எனத் தெய்வப்புலமை திரு
ளுவ நாயனர் திருவாய் மலர்ந்தும் தாமே நடத்தியும் காட்டி
இவ்வாச்சிரமத்தையே சுருதிஸ்மிருதி இதிஹாசாதிகளில் சொல்
வண்ணம் குறைவற நடத்தினுல் முத்தி என்னும் மோக்ஷ வீட்
யடைவதற்குச் சந்தேகமில்லை.

இல்லறவியல்பு.

இல்லறமாவது நற்குண நற்செய்கைகளையுடைய மனைவியோ
கூடி தருமத்தைச் செய்தலாம். இல்லறமல்லது நல்லறமன்று என்
தெய்வப்புலமை ஔவையாரும் இல்வாழ்வான் என்பான் வே
நான்கினுள் ஒன்றனையேனும் சந்தேகமற ஓதியறிந்து, ஆகமங்களை
சித்தாந்த சாஸ்திரங்களையும், மற்ற கலைகளையும் ஓதிமுடித்து ஆச
யர்க்குத் தக்ஷிணைகொடுத்து அவரநுமதியுடன் தங்குல முறைப்
விவாகஞ்செய்து ஒழுகவேண்டும்.

விரதங்களை யநுட்டித்துச் சமாவர்த்தனம் பண்ணி தான்வளர்த்
மயிர், நகம் இவைகளைக்களைந்து விபூதி, உருத்திராக்கம், பூமாலை,கு
டலம் என்னுமிவை தரித்து மூங்கிற் கோல்பிடித்து குடையேந்தி
திரன்போன்ற வெள்ளைப்பட்டு வஸ்திரமே தரித்தொழுகக் கடவ
தோளில் வண்ண வுத்தரீயமிட்டு, சிரசில் வெண்பட்டுச் சுற்றி, கா
செருப்புமாட்டி, கமண்டலங் கைக்கொண்டு போதல்வேண்டும், க
யலும் அழகுகுண மாட்சிமையுங்கூடிய பெண்ணையே வேதாக
விதிப்படி மணஞ்செய்க, மனைவி பூப்பெய்தின் விலக்கிய நாள்கள
புணராமல் விதித்த நாட்களிலே சற்புத்திரப்பேறு கருதிபுணரக் க
வன், வேள்வி, அக்கினி காரியம் ஒழியாமல் செய்து, வேதாகம வெ
முக்கத்தில் நின்று பஞ்சமகா யஞ்ஞங்களையுஞ் செய்க. இராசதரிசன
தேவாலய தரிசனம், குருதரிசன மென்பவற்றைக் கைவிடக்கூடாது.

தான்செய்த பாவங்களை மறைக்காது சொல்லவேண்டும். யாவர்
கும் உபகாரஞ்செய்யவேண்டும்.. தந்தை யெப்படி யொழுகினுரோ
அவ்வாறு தானுமிருத்தல் முறை. பிதுரர் தெய்வம் விருந்து சுற்
தார்தான் என்ற ஐந்திடத்தும் தருமஞ்செய்தல் தலைமையானதாகும்
தானுண்பது இலையாயினும் விருந்தினேடு உண்க. இன்சொல், அட
கம்,செய்நன்றியறிதல்,நல்வழியிற் பொருள்சம்பாதித்தல், குலவொழு



கம் போற்றல், உலகத்தாரோடொத்து நடத்தல், அன்புடைமை, தாய்
தந்தையர்ப்பேணல் குருவாணை கடவாது ஒழுகல் இவைகளே யுடை
மையாக்கொள்க. தீயனவற்றையும் செய்யாதிருக்கக்கடவன். பதி
னென்கு வித்தைகளையுங் கற்று, சிவபெருமானது திருவடியே கதியெ
ன்று தெளிந்து நடக்கவேண்டும் இங்ஙனம் நடப்போர் பிரமலோகத்
தை யடைந்து இறுதியிற் சிவகதியை யடைவர். இது சத்தியம்.

(இன்னுவரும்.)

கா. உ. குழந்தைவேல் பிள்ளை.

---

## என் சரிதை.

சகோதரர்களே! நான் மதுரைமா நகரிலுள்ள கருணுகரர் சரீரத்
தில் ஏகமாயிருந்தேன். அவருடைய சரீரத்திலுள்ள இரத்தங்கள்
நாளுக்குநாள் முதிர்ந்து வித்தாக மாறினது. இவ்விதத்தில் மூளையாக
யிருப்பவைகள் கிருமிகள். அக்கிருமிகளில் நானும் ஒருவனே. நானும்
மற்ற கிருமிகளும் கருணுகரர் சரீரத்தில் மணிபூரகம் என்னும் ஸ்தா
னத்தில் ஓர்சிறிய பையில் சிறிதுநாள் வாசஞ்செய்தோம். கிருமிகளாக
யிருந்த நாங்கள் கருணுகரரை பலவிதத்தில் வெளியேற்றும்படி தொந்
தரவு செய்து வந்தோம். ஒரு மாதத்திலுள்ள நீர்கள் முதிர்ந்து பூவாகி
பிஞ்சாகி, காயாகி, பழமாகி, தான் முளைக்கு தன்மையளிக்கும் தாயா
கிய பூமியை நாடுவதுபோல் நாங்கள் எங்களை வளர்ப்பிக்கும் உத்தம
ஸ்திரீ ரத்தினங்களிடம் சேர்ப்பிக்கும்படியே கேட்க, அவர் எங்கள்
இம்சை சகியாதவராய் தன் இல்லாள் ஜானகியம்மாளிடம் எங்களைச்
சேர்ப்பித்தார் நாங்கள் ஜானகியம்மாள் கெர்ப்பத்தில் (28-9-1894)
இரா 12-மணி முதல் வாசஞ்செய்ய ஆரம்பித்தோம். அந்தம்மாளு
டைய கெர்ப்ப வாசலானது நாங்கள் சென்றபின் எங்களுக்குப் பின்
வேறுயாரும் வாராதவண்ணம் சாத்திக்கொண்டது கருணுகரர் சரீரத்
தில் வசித்த மற்றுஞ் சிலர்கள் எங்களைப்போன்று உட்புகுவிக்க ஆரம்
பித்தார்கள் அவர்களையும் ஜானகியம்மாளிடம் ஒப்பிவித்தார். அந்த
அம்மாள் வேண்டாய் வெறுப்பாய் ஏற்றுக்கொண்டபோதிலும் எங்க
ளுடைய ஸ்தானத்திற்கு அவர்கள் வரமுடியாது போயிற்று. ஏனெ
னில் கதவு நாங்கள் வந்தடைந்தவுடன் பூட்டப்பட்டு இருப்பதால்
அவர்கள் வெளியிலேயே இருந்து மாண்டுபோனுர்கள். என்னுடன்
வந்தவர்கள் 15-பேர்களில் நான் ஒருவன் தவிர மற்றையோர் சின்ன

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

வில் ஒளிந்து விட்டார்கள். கடைசியாய் மீந்து நின்றவன் நான் ஒருவனே. நான் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக 10 மாசகாலம் வரை வளர்ந்து கண், காது, மூக்கு, கைகால் முதலிய அவயவங்களுடன் புழுருபத்திலிருந்து மானிடருபமாக மாறினேன். (பட்டுப்பூச்சி நம்மை போன்றதே) நான், ஜானகியம்மாள் கெற்பத்திலிருந்து (11-7-95) செவ்வாய்க்கிழமை காலை 4-மணிக்கு ஸ்ரீமம்பி ஈஸ்வர ஸ்மரணையுடன் இருகரங்களையும் கூப்பிய வண்ணமாய் வெளிப்பட ஆரம்பித்தேன்.

ஐயோ! சொல்லவோ என் அங்கமெல்லாம் பதர்கின்றன. இருபுறமும் இடுக்கி சுதவைபோன்ற வாயலைவிட்டு மீளாமல் பட்டபாட்டை இயம்ப முடியவில்லை. சொல்லொணு கஷ்டத்துடன் வெளியில் தலையை நீட்டினேன். குவா, குவா என்று கேட்டேன். அதற்கு யாதொரு பதிலுமில்லாது மருத்துவச்சி என்னை கையிலேந்தி என்மீதிருந்த அசுத்தங்களை விலக்கி கீழே கிடத்தினள்.

(இன்னும்வரும்)

## ஒரு மாணவனின் குறிப்புகள்.

### 1. உயர்தரக் கல்வி.

"ஊரார் எப்படிப் போனலென்ன, நம் வேலையை நாம் பார்ப்போம்" என்று அகங்குளிரச் சொல்லிக்கொண்டு, மற்றெல்லோரும் அழியும் குளத்தில் மீனை அள்ளும்போது, மீனில்லாக் குணற்றில் தூண்டில் போட்டுக்கொண்டு சிலர் உட்கார்ந்திருப்பார்களாம். இவ்விதமான கெட்டிக்காரர்களில் நம் நண்பர் ம-ள-ள-ஸ்ரீ, கல்விச்சிரோன்மணி நாடார் ஒருவர். அவர் பெயருக்குத் தகுந்தபடியே கல்வியிற் சிறந்தவர். தமிழில் கூட்டெழுத்தில்லாமல் எழுதியிருந்தால் அரைமணி நேரத்திற்குள் ஒருபக்கம் வாசித்து விடுவார். கையெழுத்துங் கூட போடத்தெரியுமாம். உயர்தரக் கல்வியில் தேர்ச்சிபெற்று மற்றெல்லோரும் முன்னேறிவரும் சீர்திருத்தக் காலமாகிய இக்காலிலும் அதைப்பற்றி நமக்கென்ன கவலையென்று சும்மாயிருக்கும் குணமுடையவர்.

அவரை நான் நேற்றுக் காலையில்தான் முதன் முதலாகச் சந்தித்தேன். வைகையாற்றில் ஸ்நானம் செய்வதற்காக சற்று காத்திருக்கும்போழுது, அவரும் அதே காரியத்திற்காக என்சமீபத்தில் உட்கார்



திருந்தார். ஆனதால் நாங்களிருவரும் சிறிதுநேரம் சம்பாஷித்துக் கொண்டிருந்தோம்.

முதலில் அவர் என்னைப் பார்த்து, "தம்பி, நீ யார்?" என்று வினவினர். அதற்குநான் "என் சொந்தஊர் சண்டையிடும்பட்டி, இந்த ஊரில் வாசித்துக் கொண்டிருக்கிறேன்" என்று சொன்னேன். அவர் இங்கிலீஷ் வாசித்திருக்கிறாயா வென்று கேட்கவே "ஆம்" என்று தலையை அசைத்தேன். உடனே அவர், "எங்கே இங்கிலீஷில் பேசபார்க்கலாம்" என்றார். இதைக் கேட்டுக்கொண்டே ஸ்நானஞ் செய்து கொண்டிருந்த என் பள்ளித்தோழனுகிய ராஜநாயகம் கலகலவென்று சிரித்துவிட்டான். ஏனென்றால் ராஜநாயகம் திருநெல்வேலியைச் சேர்ந்தவன், அங்கே "பேசு" என்றால் "ஏளனஞ்செய்," "ஏசு" என்ற அர்த்தமும் உண்டு. ராஜநாயகம் தன்னைப் பார்த்துத்தான் சிரித்தானென்பது நமது நண்பர் கல்விச் சிரோன்மணி நாடாருக்குத் தெரியாது. நான், வந்தசிரிப்பை அடக்கிக்கொண்டு, "ஒருவன் மட்டும் எப்படிப் பேசுகிறது, இன்னொருவ ரிருந்தால் பேசலாம்" என்றேன். அதற்கவர், "நீ சொல்லுகிறதை நாம் நம்பப் போவதில்லை. என்மகன் செல்வச் சிரோன்மணி ஏழாம்படியோ 'எட்டாம்படியோ படிக்கிறுன். நேற்று எங்கள் கடைக்கு "சட்டைக்காரன்" ஒருவன் வந்து அரிசியிலே கேட்டான். கடையில் உட்கார்ந்திருந்த என் மகன் ஒன்றும் சொல்லத் தெரியாமல் விழித்தான். நானும் நேற்றே நீ படித்தது போதுமப்பா என்றுசொல்லி கடையிலேயே வைத்துவிட்டேன். அவன் தாயாரும் அவனுக்கு கல்யாணம்செய்து பார்க்கவேண்டு ஒரு வருஷத்திற்கு முந்தியே சொல்லிக்கொண் டிருந்ததால், வருகிற சித்திரை மாதத்தில் கல்யாணம் செய்து வைத்துவிடப் போகிறேன்" என்று சொன்னர். "உங்கள் மகனுக்கு என்னவயதிருக்கும்" என்று நான் கேட்கவும் அவர், "போன அற்பிசியோடு பதினறு முடிந்துவிட்டது. அவனுக்கு ஒரு மாதத்திற்கு இளையவன், சங்கன்ஊர். அதாவது, பணக்காரன்பட்டியைச்சேர்ந்த மூடசிகாமணிசட்டுபோன வருஷம் கோவில்கட்டுங் கோட்டையில் பெண்ணெடுத்தார்கள். ஒரு மாதத்திற்கு முன் ஒரு குழந்தை பிறந்திருக்கிறதாக தகவல் கிடைத்திருக்கிறது" என்று சொன்னர். நான் அவரைப் பார்த்து, "பதினறு வயதில் நீங்கள் என் உங்கள் மகனுக்குக் கல்யாணம் செய்து வைக்க



Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

வேண்டும்? பதறாமல் இன்னும் ஏழெட்டு வருஷங்கள் கழித்து செ... தாலென்ன? அதுவரைக்கும் உங்கள் மகன் வாசித்தால் எவ்வளவோ மேன்மை யடையலாம்." என்று சொன்னேன்.

(இன்னும்வரும்)
ராஜநாயகம்.

---

## விகடனும் விண்ணப்ப வியாசமும்.

விகடரே குட்மார்னிங், ஏது தண்டோரு முழக்கம் பலமாயிரு கிறதே. ட்ருமாவா? சர்க்கஸா? பயாஸ் கோப்பா? குழந்தை ஏதாவ தவரிவிட்டதா? கள் சாராயம் மார்க்கட்டில் லாகிவிட்டதா? எங்... யாவது அரிசிமக்கு உள்ளதை, குருணையுள்ளதை, கூடியவிலைக்கு போடுகிறார்களா? ஏதாவது ஏலமா? நோட்டு கிட்டு தவரிவிட்டதா ...ஊர் கூட்டமா? உறசவமா? என்ன சார் விசேஷம்?

வாருங்கோ பிரதர் நீங்கள் சொன்னவைகளுக்கும் தண்டோரு போடுவதும் வழக்கம் தான். ஆனால் இது ஒரு விநோத தண்டோரு...

விகடரே என்ன விநோதம்? நம் நாடார்குல மித்திரன் 2-வது சஞ்சிகையில் 29-வது பக்கத்தில் நம்முடைய "குமார்" என்னும் நி... பர் விண்ணப்ப வியாசம்எழுதி இருந்தாரல்லவா? அதற்கு எவ்வித... மான பதிலும் கிடைக்கவில்லை. எனக் குடராவளஞ் செலவுகொடுத்து இமயமலை முதல் கன்னியாகுமரிவரை நாடார்கள் எங்கெங்கு இரு... கிறார்களோ அங்கங்குபோய், விண்ணப்பவியாச விஷயமாய் என்... நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள், பார்த்துவாருங்களென்று தூதனுப்பினார். அப்படியே நானும் ஸ்டீமரிலும், தோணியிலும், ர... விலும், மோட்டாரிலும், மோட்டார் சைக்கிளிலும், சைக்கிளிலுமா... (இன்னும் கொஞ்சகாலம் சென்று தூதனுப்பினால் ஆகாயவிமானத்... தில் கூடபோவேன்) அங்கங்கு சேம்ப்போட்டு நடவடிக்கைகளை நோக்கினேன் சில ஊர்களில் நமது மித்திரன் விளையாட்டு... காணோம். சில ஊர்களில் நம்மவர்களுடைய பள்ளிக்கூடமோ சங்... மோ இன்னும் பிறக்கவில்லை. சில ஊர்களில் சதியாலோசனைக் கார... கள் பொது ஜனங்களைப்பார்த்து, "பார்த்தீர்களோ கிராமங்களின் பெயரும் தலைக்கட்டும் ஜனத்தொகையும் பணக்காரர் முதலியஸ்தர்... இவர்கள் பேரைக்கேட்டு எழுதி வாங்கிக்கொண்டு பணம் பறிக்க... பார்க்கிறார்கள்" என்பது உபதேசம் செய்கிறார்கள் இது கிடக்கட்டு...



சங்கங்கள் இருக்கும் ஊர்களில் பார்த்தாலோ ஒரு சங்கத்துக்கு ஒரு சங்கம் நேர் விரோதம், ஒரு சங்கத்தில் இரண்டுமூன்று கட்சிகள், இப்படி இருக்கிறது ஒரு நோக்கமில்லாத சங்கங்களும் சில இருக்கின்றன அவைகளெல்லாம் "இந்தச்சங்கம் வருஷக் கொண்டாட்டம் கொண்டாடி விட்டதே அந்தச் சங்கம் வருஷக் கொண்டாட்டம் கொண்டாடி விட்டதே அது அவரைக் கொண்டுவந்து அத்தனைநாள் நடத்தியது இவரைக் கொண்டுவந்து இத்தனைநாள் நடத்தியது நாம் அவருக்குமேல் அவரைக் கொண்டுவர வேண்டும் பருப்புவகை காய் கறிவகை பலதினுசு சமைக்கவேண்டும் மிட்டாய் லட்டு போடவேண்டும் ரிப்போட் புஸ்தகம் இப்படி போடவேண்டும் பட்ஜட் அப்படி போடவேண்டும்" என்ற விஷயங்களிலேயே கவனத்தை செலுத்திக் கொண்டிருக்கிறது இதைஎல்லாம் பார்த்துக்கொண்டு ஒரு யாதாஸ்து எழுதி என்னை தூதனுப்பி யவரிடம் சமர்ப்பித்தேன். அவர் யாதாஸ்தை வாங்கிபார்த்து நம்குல முன்னேற்றத்துக்காக கூடிய சங்கங்கள் கூட ஒரு விண்ணப்ப வியாசத்தைக் கவனியாமல் இப்படி எல்லாம் செய்துகொண் டிருக்கிறதென்று கண்ணீர் விட்டுக்கொண்டு என்னைப் பார்த்து விகடரே இனி உங்களுடை தண்டோருவில் தான் என் விண்ணப்ப வியாசத்துக்கு பதில் கிடைக்கவேண்டும் உங்கள் வேலையை இன்றுமுதல் துவக்குங்கள். என்று செலவுக்கு பணம்கொடுத்து அனுப்பிவிட்டு வருகிற தபால்களைப் போட ஒரு பெட்டி தயார்செய்து வைத்து உட்கார்ந்து கொண்டிருக்கிறார் நான் சில ஊர்களுக்கு போய் தண்டோரு செய்துவிட்டு இன்று இங்கு கேம்ப் அடித்திருக்கிறேன் இதுதான் சார் தண்டோரு விஷயம்.

அப்படியா விகடரே இதற்கென்ன கரும்புதின்ன கூலியா இது ஒரு கஷ்டமா நாடார்குல மித்திரன் 2-வது சஞ்சிகை 29-வது பக்கத்திலுள்ள விண்ணப்ப வியாசத்துக்கு நானே எனக்கு தெரிந்ததை இன்றைக்கே எழுதிப் போடுகிறேன் விலாசம் என்ன விகடரே?

குமார் நாடார்குல மித்திரன் ஆபீஸ் அருப்புக்கோட்டை என்று எழுதி ஸ்டாம்பு ஒட்டி அனுப்பிவிட்டால் போதும் அவர் வைத்திருக்கும் பெட்டியிலேயே வந்து சேர்ந்துவிடும். நல்லதுங்கசார் போய் வருகிறேன் இன்னும் அநேக ஊர்போய் சமாச்சாரம் தெரிவிக்கவேண்டும் போய்வாருங்கள் குட் நான் (விகடன் விண்ணப்பம்) ஐயாமார்களே சங்கத்தார்களே பெரியோர்களே நண்பர்களே முதலாளிமார்களே தொழிலாளர்களே பணக்காரர்களே படித்தவர்களே விகடன்

சுற்றுப் பிரயாணத்தில் பிளாக்மார்க் (Black Mark) வந்துவிடாமல் தயவுசெய்து விண்ணப்ப வியாசத்துக்கு பதில் எழுதும்படி விழுந்து விழுந்து நமஸ்காரம் செய்கிறேன்.

---

## நமது நாவல்.

தந்தனத்தந் தானத்தானச் சந்தமாமா, தானத்தந் தானத்தானச் சாப்பாட்ரோமா:—என்னும் பல புராதனப் பாடல்களும், நங்கைக் கதைகளும் தற்கால நாகரீகக் கலியனைக்கண்டு பயந்து கடல்முனி வயிற்றிற் குடிபுகுந்து விட்டன. ஆயினும் தனவானுக்கு நாற்காலி தரித்திரனுக்குக் காற்காலி, என்னும் பணமயம் பரவிய தற்போதைய நவீன கதாநாவல்களும் நாடகங்களும் நாலுதிசையும் திரிந்து நடனம் ஆடுகின்றன. இவ்வாடலைக் கண்ட இந்தியக் குழவிகள் தந்தம் ஜாதியின் முன்னேற்றம் என்னும் கப்பலைத் தன்னலம் என்னுங் கடலில் வேகமாகச் செலுத்தி முந்தினேம் முந்தினேம் என்றேடுகின்றனர்.

இந்தியத்தாயார் இந்தநிலைமையிலிருக்குஞ் சமயம் சொந்தபுத்திரனுகிய நமது நாடார்குல மித்திரனையும், ஈன்றெடுத்து ஒன்பதுமாதக் குழந்தையாகவும் வளர்த்து விட்டாள். இம்மித்திரன் மூலமாக ஆங்காங்குள்ள நங்குலப் பாண்டியன் வம்சாதிபதிகளும், தம்மைத் தாம் நீந்து, நம்மைக் காப்பது நமதுகரமே! என்றெழுந்து முன்சொன்ன முன்னேற்றக் கடலைத்தாண்ட முயற்சி செய்கின்றனர். இதையறிந்த நமது மித்திர வித்வரத்னங்கள் பலதும் தத்தம் புத்திக்கெட்டிய யுக்தியைப் போதித்துத் தற்கால நாகரீகத்தைக் கையாடி வருகின்றனர்.

இச் சந்தர்ப்பானு சாரத்தில் தற்கால நாகரீக நாவல்களை பகுசரித்து நானும் ஓர் நவீன நாவல் (விஷயம்) ஒன்றை நம்ஜன சமூகத்திற்குச் சொல்ல முன்வந்தேன் சேர சோழ பாண்டியம், என்னும் எல்லைப் பகுதிகளில் பாண்டி தேசத்தைப் (மதுரைத் திருநெல்வேலி ராமநாதபுரம் ஜில்லாவில் பெரும்பாகத்தைப்) பரிபாலித்தவன் பாண்டியராஜன் என்பதிற் சையமில்லை. இப் பாண்டியனுக்கு மாறன், நாடன், எனப் பலபெரிய பட்டப் பெயர்களுண்டு.

இவன் க்ஷத்திரியன். (அதாவது உலகோர் சொல்லும் பிரம்ம க்ஷத்திரிய வைசிய சூத்திரர் என்னும் நான்குபடியில் இரண்டாவது ஸ்தானத்தை யுடையவன். அந்தமிகுந்த சந்திரகுலாதிபதி. வாரமாய்ச் சங்கம் வளர்த்தவன். என்னும் பெரியோர் சொல்லுக் கிணங்க மென்மேலும் தமிழை விருத்தி செய்தவன். இதனுல் சங்கமுழங்குந் தமிழ் நாடன். என்றும் சொல்வதுண்டு.



இப்பாண்டியனது வம்சாதிபதிகள் நாங்கள் தானென்று (நாடார்களாகிய நம்மையன்றி) மற்றையோர் சொல்லி முன்வரும் வல்லவரலர். இனிமேல் வரினும் அவரை உலகம் புறக்கணிக்கு மென்பதிற் றடையில்லை. அவ்வித மற்றவர் வரப்போவதுமில்லை. இத்தகைய மேன்மைக் குலத்துதித்த நாடார்குல மரபினர்கள் தற்காலம் சுமார் பத்து லக்ஷத்துக்கு மேற்கொண்ட ஜனத்தொகையுடன் நாலுதிசையும் பரவி வாசஞ்செய் கின்றனர். இவர்களிற் பெரும்பாலார் பிரபல வியாபாரிகளாக விளங்குகின்றனர்.

அங்கனம் வியாபாரஞ் செய்யும் நம்மவர்களில் அநேகர்.......... நாடார் அண்டு கம்பேனி..............நாடார் அண்டு பிரதர்ஸ் எனத் தங்கள் ஜாதியின் பட்டப்பெயரை மாற்றுது காட்டுகின்றனர். தவிரவும் அவரவர்கள் கம்பெனியின் தந்திவிலாசமும் பாண்டின், க்ஷத்திரியன். நாடார். என்றும் ஜாதிப்பெயரைக் கொடுத்திருக்கின்றனர்.

ஆனுல் சில நாடார்களோவெனில், தாங்கள் பிரபல வியாபாரிகளா யிருந்தும். தங்கள் கம்பெனிப் பெயர்களில், நாடார் என்ற பட்டத்தைக் காட்டாது, சங்கர் அண்டு கம்பெனி லிங்கம் அண்டு கம்பெனி, என்றிப்படி பெயர்களை மொட்டையாக வைத்துக்கொண்டு சட்டம் பேசுகின்றனர். இதுதான் தற்கால நாகரீகமாம். ஐயோ! இதென்ன அநியாயம்!! சமீபத்தில் நான் அறுப்புக்கோட்டை சென்றிருந்த சமயம், அங்கோர் ஆர்மோனியம் (வாத்தியப்பெட்டி) கம்பெனியின் விளம்பர நோட்டீசைக் கண்ணுற்றேன் அதில் சகலவித வாத்தியப் பெட்டிகளும் அவரவருக்குக் தேவையான சுரஸ்தான சீட்ஸ்கள் (கீதம் கொடுக்கும் தந்தப்பல்லுகள்) அமைத்துச்சகாயமான விலைக்குச் செய்து கொடுப்பதாக எழுதியிருந்தது.

அந் நோட்டீசில் சிவசாமி அண்டு கம்பெனி என்று கையொப்பமிட்டிருந்தது. இவர் யாரென்று எனது நண்பரைக் கேட்டேன். அவர் சிரித்தென்று நகைத்தார். காரண மென்னவென்றேன் ? இவர்தான் சிவசாமி நாடார் என்று சொன்னுர். அடடா! என்ன ஆச்சரியம். நம் குலத்துதித்த ஒருவர் சங்கீதஞான சாஸ்திரத்தில் தேர்ச்சிபெற்று

கிதராத சுரத்துடன் ஸ்ருதியமையக் கூடிய வாத்தியப்பெட்டி செய்யும் வல்லுனரா யிருந்தும் சிவசாமி அண்டு கம்பெனி என்று மொட்டைப் பெயரையிட்டுக் கொண்டாரே? ஏன்? சிவசாமி நாடார் அண்டு கம்பெனி என்று பெயரிட்டால் இவரைத் தடுப்பவரார்? இதனால் இவருக்குப் பிரக்யாதி வாராதோ? என்று பலவிதம் நினைத்து அவரையும் கண்ணாரக்கண்டு அவர் செய்திருக்கும் வாத்தியப் பெட்டிகளையும் பார்வையிட்டு, பட்டப்பெயரைக் காட்டா திருப்பதுதான் நாகரீகமும் ஜாதி முன்னேற்றத்திற்கு முயற்சியும் என்றெண்ணி சென்னை வந்து விட்டேன்.

நாடார்குல மித்திரர்களே! உலகில், முத்தனுய் முருகனுய் முருகப்பனுய் முதலியானுய் என்றுசொல்லும் பழமொழிக் கிணங்க, காலத்திற்கேற்ற கோலம் புனைந்தும், சமயத்திற் கேற்ற ஜாதிப்பட்டத்தை வகித்தும், நான் பிரம்மாவின் வயிற்றிலிருந்து பிறந்தவன், இல்லை இல்லை, அவன் வேதன் காதுவழியாய்ப் பிறந்தவன், அது சுத்தப் பொய் இவன் மலரோன்தலையி லுற்பத்தியானவன், என்றும், நான் தீண்டாத் திருமேனி, நாங்கள் மேலான ஜாதிப் பிரம்மக்கியானி என்று சண்டபடிபேசி உண்டுதிரியும் வழக்கம் நம்மிடமில்லை. அன்றும் பாண்டியன் இன்றும் பாண்டியராகவே யிருக்கின்றோமே தவிர மாறுபாடில்லை. இருந்தும், குலப்பெயரைக் காட்டி நலம் பருமற் போவோமாகில் அதைவிடக் குறைவு வேறில்லை. வித்தையில் விற்பன்னராக முயல்வதும் வியாபாரத்தில் விபுதர்களாக முயற்சிப்பதும் எதற்கு? ஜாதியின் அபிவிருத்தியைக் கருதியன்றோ?

> அந்தவள நாடர்பெறு மானரசர் கோமான்
> இந்திரன் முடிக்கிடை யெரிந்தவளை வீரன்
> நிந்தையறு தென்கயிலை நெற்றிவிழி போலே
> முந்திய திசைக்கரி முகத்தெழுதி வைத்தோன்.

வஜ்ஜிராங்கதப் பாண்டியன் ஒரு காலத்தில் அஷ்டதிசை யானைகள் முகத்திலும் தன்வீரப்பிரதாப ஜாதிப்பெயர் நிலவும்படி தனது மீனக்கோடியை எழுதிவைத்தான். என்பது அருணசல புராணம். இவ்விதமிவன் செய்ததெதற்கு? என்றென்றும் தனது குலநலமும் க்ஷத்திரியவீரமும் குன்றுதிருக்கும்படி யல்லவா?

“வலனுயர்த்த வண்ணலஞ்சேர் வான்றெடுபொற் கோட்டிமைய வரையிற்றீட்டி, அலர்தலைமா நிலம்புரக்கும் அதிவீரராமனிக லரசரேறே.”



பகைத்த மன்னராகிய (யானைகளுக்கு) ஆண்சிங்கம் போன்ற அதிவீரராம பாண்டியன் இமயமலையைத் தனது ஆக்ஞைக்குள்ளடங்கிய எல்லைக்கல்லாக்கி அதில் தன் மீனக்கோடியை வரைந்து வைத்தவன். (என்பது நைடதம்)

வாடாதப் புகழ்கொண்ட நாடார் குலோத்தமர்களே! இவ்விதம் பலவித மேற்கோள் உதாரணங்களைச் சொல்லலாம். நமது முன்னவராகிய மன்னவர்கள் தன்குலப் பெயரை மாற்றாது தமது விருதுகளிலொன்றை அங்கங்கே ஸ்தாபித்து நாளதும் நமக்குதவி பெறும்படிச் செய்திருப்பதை யோசியுங்கள். சமீபதாதாக்களாகிய நமது பிதாக்களும் தாங்கள் செய்த வர்த்தகக் கம்பெனிகளில் தங்கள் பெயரைப் பட்டமீன்றி வைத்திருந்ததாகக் காணப்படவில்லை. நவீனம் நாகரீகம் இன்னதென்பதை யுணராது அரைப்பெயரிட்டுப் பறைசாற்றுவதில் பிரயோசனமில்லை. அதுஎன்றுங் குறைவுதான். முறைப்படி நடப்பதே நமது கடமை. அதுவே நாகரீகம்.

சென்னைமா நகராகிய என்னூர்வாசிகளில் பொடி வியாபாரம் செய்யும் சில நாடார்கள் பட்டப்பெய ரின்றியே கம்பெனிப்பெய ரிட்டிருக்கின்றனர். இராஜதானியில்வசிக்கும் நாடார்களே இவ்விதம் செய்வாராயின்கிராமங்களில் வசிப்பவர்கள்செய்வதற்குச்சொல்லவும்வேண்டுமா? சகோதரர்களே! தற்சமயம் பந்தயமிட்டோடும் உலகவோட்டத்தில்நாமுங்கூடிவிட்டோம். இதுசமயந்தான் நமதுகுலப்பெயரைவிளக்கிக்காட்டி வியாபார வித்வசிலத்தை நீட்டி தன்னலத்தை முன்னேற்றிக் காட்டவேண்டும். இலதேல் பந்தயவோட்டத்தில் பிந்திவிடுவோம். ஆதலின், சென்னைவாசிகளாகிய என்னூர் நாடார்குலப் பிரபுக்களே! ஏனைய சிற்றூர் சகோதரர்களே! உற்ற பெயரைக்காட்டிப் பெற்ற வர்த்தகத்தை விருத்திசெய்து மொத்தமாகிய நமது பாண்டிய நாட்டின் வசித்தைச் சீராக்க முயற்சி செய்யுங்கள்.

எனது மித்திர புத்திரனே! க்ஷத்திரிய பத்திரனே! இத்துடன் எனது தற்கால காவல் நடையைக் கட்டி விடுகின்றேன். மெத்த வந்தனம். மற்றொருமுறை சந்திக்கின்றேன்.

ச. க. சங்கரலிங்க நாடார்.

---

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

## கோடைகாலத்திற்கு!!!

என்னதேவையோ அதை தேடிக்கொள்ளவேண்டும்

### சர்வ தேள் விஷ சஞ்சீவி

ரிஜிஸ்டர்டு.

இந்த லங்கர் மார்க்குள்ள சர்வதேள் விஷ சஞ்சீவியைக்கைப்பற்றுங்கள் இவ்விஷ சஞ்சீவி ஒவ்வொரு வீட்டிலும் அவசியம் இருக்கவேண்டியது ஏன் என்றால் ஓர் மனிதன் இரவில் 12 மணிக்கு நித்திரையில்

1920 வருஷத்திய கியாலண்டர் இனாம்.



ரூபாய் 100 இனாம்.

விஷந்தீண்டி விட்டால் அம்மனிதன எவ்வளவோ அவஸ்தைப்பட அநேக மருந்துகளையும் மந்திரங்களையும் உபயோகித்தும் பயன்படாமற் போகிறதல்லவா? அதற்காக இவ்விஷ சஞ்சீவி ஒவ்வொரு இல்லத்திலும் அவசியம் இருக்கவேண்டியது.

விலை 1-பாக்கெட் அணு 0—8—0
விலை 12-பாக்கெட் ரூபா 5—0—0

வி. எ. எஸ். பாணி,

நெ. 3, இருளப்பன் தெருவு, மதராஸ்.


நமது மித்திரின்

## போஷகப் பிரபுக்கள்.

பாலக்காடு மாஜி கௌன்சிலர், ஒலவக்கோடு வர்த்தகம். மு-ா-ா-ஸ்ரீ, க. கு. பொன்னப்ப நாடார் வரவு ரூபா 50—0—0

அருப்புக்கோட்டை நாடார் குலாபிமானியும், ஸ்ரீ அமுதலிங்கேஸ்வரர் தேவாலயதருமகர்த்தாவுமான ஸ்ரீமான் மு. மு. முத்துசாமிநாடார் அவர்கள் செல்வப் புதல்வர், மிஸ்டர் மு. மு. முத்துக்குமாரசாமி நாடார் வரவு ரூபா 50—0—0.

சென்னை நீலநூல் வியாபாரம் நாட்டாண்மை, மு-ா-ா-ஸ்ரீ, கா. ஆறுமுக நாடார் வரவு ரூபா. 50—0—0.

சென்னை பாண்டியகுல க்ஷத்திரிய நாடார்கள் ஐக்கிய சங்கத்தின் செகிரிடெரியும், பிரபல வர்த்தக மிராசுதாருமான மிஸ்டர், ஆ. ப. வை. கோதண்டராம பாண்டிய நாடார் வரவு ரூபா 50—0—0.


### வைத்திய சாஸ்திரம்

| | | | | |
|---|---|---|---|---|
| மானிட மர்ம சாஸ்திரம் | ரூபா | 5 | 0 | 0 |
| மஹாவைசிய சாஸ்திரம் | ரூபா | 3 | 0 | 0 |
| ஹிப்னாடிஸம் | ரூபா | 5 | 0 | 0 |
| சிங்க வீரிய மாத்திரை | ரூபா | 3 | 0 | 0 |
| காந்த ரெத்னம் | அணா | 0 | 6 | 0 |
| சாரதா | அணா | 0 | 4 | 0 |
| சந்திரகாந்தி | ரூபா | 1½ | 0 | 0 |
| 50 அரிய ஔஷத முறைகள் | அணா | 0 | 12 | 0 |
| டிை 5-பாகங்கள் | ரூபா | 2 | 0 | 0 |

சேட்லாக் வேண்டியவர்கள் இனாமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

S. சாமிவேல்,

தென்சாஞ்சி, இரங்கோன்.


Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

சுகமடையவும் உண்மையறியவுங் கருதுங்கள்.

## ஒரு முறை பரிக்ஷை பாருங்கள்.

### தந்தரோக நிவாரண சஞ்சீவிச் சூரணம்

பல்வலி பல்லரணை பல்லசைவுபல் தெரிப்பு பல்கூச்சம், பல் புழு ஈறுகரைதல் இரத்தம் வடிதல் வாய் நாற்றம், வாய்ப்புண் முதலிய சகல தந்த ரோகங்களை உடனே நீக்கக்கூடிய, இந்த அருமையானபற்பொடி, நீண்ட கால ஆராய்ச்சியின்பேரில் பற்களுக்கு நன்மை செய்யக்கூடிய சகல கடைச்சரக்கு மூலிகைகள், யாவுஞ் சேர்க்கப்பட்டு அதனதன் முறைப்படியே பக்குவஞ் செய்து, அதனதன் அளவுப்படி மிக கவனத்துடன், கல்நார் பஸ்பம் கடைச்சரக்கு மூலிகைகள் யாவும் முறைப்படிசேர்க்கப்பட்டு தயாராகஇருந்து உபயோகித்தவர்களுக்கும் மிகுந்த திருப்தியைக் கொடுத்திருக்கிறது. இப்பொடியை ஒரு முறை உபயோகித்தவர்கள் எவ்வித தந்த ரோகத்திற்கும் அஞ்ச வேண்டுவதில்லை. சகலரும் உபயோகிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன், மிகுந்த குறைந்தவிலைக்கு விற்கப்படுகிறது. வாங்கி உபயோகித்து மற்றவர்களுக்கும் அடைந்த நன்மையைத் தெரிவிக்கக்கோருகிறேன்.

மூன்று மாதத்திற்கு வரக்கூடிய டப்பி க்கு விலை ரூ. 0-6-0

தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

ஏஜண்டுகள் தேவை. விலாசம்.

வி அருமை நாயகம் நாடார்,
போட்டோகிராபர்,
மருந்து ஷாப், தூத்துக்குடி.

---

பேரிய கம்பெனி! சகாயவிலை!! நயமானசரக்குகள்!!!

திருப்தி யில்லாத சரக்குகளைத் திரும்பப் பெற்றுக்கொள்வோம்.

எங்களிடம் காசியில் தயாராகும் பட்டு பீதாம்பர சேலைகள் துப்பட்டாக்கள் ரவிக்கைகள் தாவணிகள் பஸ்காணுக்கள் முதலிய சகல பட்டு தினுசுகளும் மிகவும் சகாய விலைக்கு ஏராளமாகத் தயாராக இருக்கின்றன.

வேண்டியவர்கள் எங்கள் "பட்டு பீதாம்பர கேட்லாக்" வரவழைத்துப் பார்த்துக் கொள்ளவேண்டியது. உடனே எழுதுங்கள்.

விலாசம்:—

பட்டு பீதாம்பர கம்பெனி, காசி.
**SILK PITAMBER COY.,**
**BENARES CITY.**

---

Editor & Publisher S. A. Muthu Nadar "Nadarkula Mitran" Office Arruppukottah.
Printed at the Ravarathnam Press 34, Broadway Madras.

---

கவனியுங்கள்:—இப்பத்திரிகையில் 280-வது பக்கம் அடுத்து 277 ஆரம்பமாகியிருப்பது தவறுதலாக சேர்ந்து விட்டது. ஆதலின் முறையே 281-முதல் 288-வரை பக்கம் நெம்பர் சேர்த்துக்கொள்ளவும். பத்திராபர்.

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

Tamil Heritage Foundation
தமிழ் மரபு அறக்கட்டளை

Electronic preservation of Tamil heritage materials
e-Book series
an international NGO initiative to digitize old Tamil books
and palm leaf manuscripts
visit http://www.tamilheritage.org

தமிழ் ஓலைச்சுவடிகள், நூல் பாதுகாப்பு.

பாதுகாப்பற்ற நிலையில், மறுபதிப்பு காணாத பழைய நூல்கள், ஓலைச்சுவடிகள் போன்ற தமிழ் முதுசொம்களை மின்பதிப்பாக்கி தமிழ் வளத்தை நிரந்தரமாக்கும் ஒரு சர்வதேச தன்னார்வ முயற்சி.

மேலும் அறிய: http://www.tamilheritage.org

முதுசொம் முத்திரை
தமிழ்ப்பாதுகாப்பின் அக்கறை

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection